# காங்கேசன் துறைமுகத்திற்கு உணவுக்கப்பல் நாளை வந்து சேருகிறது!

★ விலை ரூபா 1-00

# ஈழநாடு
THE EELANADU

(1958 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)

மலர் 25 ஆடி 6 ஷவ்வா 11 இதழ் 161

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 22—7—83

(மாவிட்டபுரம்)

வட பகுதியில் ஏற்பட்டுள்ள உணவுத் தட்டுப்பாட்டை நிவர்த்திசெய்வதற்காக மா, சீனி ஆகிய உணவுப் பொருட்களுடன் அவசரமாக ஒரு உணவுக் கப்பல் காங்கேசன்துறைத் துறைமுகத்திற்குத் திசை திருப்பப்பட்டுள்ளது. நாளை இக்கப்பல் காங்கேசன்துறைத் துறைமுகத்திற்கு வந்து சேருமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா, உதவி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி திரு. பி. நடராசா ஆகியோர் வடபகுதி மக்களின் விநியோகத்திற்கு யாழ்ப்பாண மாவட்ட உணவுக் களஞ்சியங்களில் கையிருப்பு எதுவும் இல்லையென்றும், அடுத்த வாரம் சீனி, மா ஆகிய பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படக்கூடுமென்றும் அறிவித்ததைத் தொடர்ந்து உணவுக் கமிஷனர் திரு. எம். புலேந்திரன் அவசர நடவடிக்கையாக இக்கப்பலை இங்கு அனுப்பிவைத்துள்ளார்.

இத்தாலியிலிருந்து ஐயாயிரம் தொன் அன்பளிப்பு மாவுடன் வந்த எம். வி. 'அல்பராத்' என்னும் இக் கப்பல் கொழும்புத் துறைமுகத்தில் இரண்டாயிரம் தொன் மாவை இறக்கிய பின்னர் அங்கு இரண்டாயிரம் தொன் சீனியை ஏற்றிக்கொண்டு நேற்று மாலை காங்கேசன்துறை நோக்கிப் புறப்பட்டது.

இக் கப்பல் கொழும்புத் துறைமுகத்தில் மா இறக்க வென ஒப்பந்தம் செய்துவந்த போதிலும் உணவுத்தட்டுப்பாட்டை நிவர்த்திசெய்ய உணவு இலாகாவினர் விடுத்த அவசர வேண்டுகோளை கப்பல் உரிமையாளர்கள் ஏற்று இக் கப்பலை அனுப்பிவைக்க சம்மதம் தெரிவித்தனர். இதுசம்பந்தமாக நடைபெற்ற மகாநாட்டில் உணவு இலாகா பிரதிநிதிகள், இலங்கை கப்பல் கூட்டுத்தாபன பிரதிநிதிகள் கப்பல் கம்பனியின் சார்பில் வெளியூர் பிரதிநிதி காப்டன் திரு. எம். பங்கா, உள்ளூர்

(6-ம் பக்கம் பார்க்க)

# "இலங்கை உள்விவகாரத்தில் இந்தியா தலையிடுகிறது!" இலங்கை குற்றச்சாட்டு

(கொழும்பு)

**இலங்கையின் உள் விவகாரங்களில் இந்தியா தலையிடுவதாக இலங்கை அரசு குற்றம் சாட்டியுள்ளது. இந்தியாவின் இப்படியான நடவடிக்கைகள் இரண்டு நாடுகளுக்குமிடையியே நிலவிவரும் நல்லுறவைப் பாதிக்குமென எச்சரிக்கையும் விடுக்கப் பட்டுள்ளது.**

இலங்கையிலுள்ள இந்தியாவின் பதில் தூதுவர் திரு. ஆர். எம். அபயங்கர் இங்குள்ள வெளிவிவகார அமைச்சுக்கு அழைக்கப்பட்டார். வெளிநாட்டமைச்சர் ஜனாப் ஏ. ஸி. எஸ். ஹமீத், இலங்கை அரசின் மனத்தாங்கலைப் பதில் தூதுவருக்குத் தெரிவித்தார்.

இந்தியாவிலுள்ள இலங்கைத் தூதுவர் பெர்னாட்திலகரத்தின புதுடில்லியிலுள்ள இந்திய வெளி அலுவல்கள் அமைச்சிற்குச் சென்றபோது அவரிடம் வெளிவிவகார அமைச்சின் மேலதிகச் செயலாளர் கே. சங்கர் வாஜ்பாய், 'யாழ்ப்பாணத்தில் சமீபகாலமாக நடந்துவரும் சம்பவங்களை இந்தியா அவதானித்து வருகிறது; இது இலங்கை அரசுக்குத் தெரியாதுள்ளது' என்று தெரிவித்துள்ளார்.

''யாழ்ப்பாண விஷயத்தில் தமிழ்நாடு அரசு காட்டிவரும் அக்கறை பற்றி நீங்கள் குறிப்பிடுகிறீர்களா? அல்லது இந்திய மத்திய அரசின் கருத்தைக் கூறுகிறீர்களா?'' என்று இலங்கைத்தூதுதர் வாஜ்பாயிடம்

(6-ம் பக்கம் பார்க்க)

## செய்தித் தணிக்கை அமுல்

கடந்த புதன்கிழமை 20ம் திகதி முதல் பயங்கரவாதம் சம்பந்தமான செய்தித் தணிக்கை அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. 'ஈழநாடு' பத்திரிகையில் வெளிவரும் ஒவ்வொரு செய்தியும் தணிக்கை அதிகாரியின் அனுமதி பெற்றே பிரசுரமாகிறது.

## எம். ஜி. ஆர். காரணமா?

(கொழும்பு)

இலங்கையின் உள்விவகாரத்தில் இந்தியா தலையிடுவதற்கு தமிழக முதல்வர் எம். ஜி. ராமச்சந்திரன் காரணமாக இருக்கலாமா என்ற கேள்வியை கொழும்பிலுள்ள அரசியல் வட்டாரங்கள் எழுப்பியுள்ளன.

தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு எம். ஜி.ஆர். ஆதரவாக இருப்பதால், அவர் தனக்குள்ள ''செல்வாக்கை'' மத்திய அரசுக்குள் புகுத்தியிருக்கலாமென்று இந்த வட்டாரங்கள் எண்ணுகின்றன.

## யாழ்ப்பாணத்தில் சிவில் நிர்வாகம் சீர்குலைவு!
### சபையில் பிரதமர் விளக்கம்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் சிவில் நிர்வாகம் சீர்குலைந்துள்ளது என்று பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா நேற்றுப் பாராளுமன்றத்தில் பேசுகையில் கூறினார்.

அவசரகாலச்சட்டத்தை மேலும் ஒரு மாதகாலத்திற்கு நீடிக்கும் பிரேரணையைச்சமர்ப்பித்துப் பேசுகையில் பிரதமர் மேற்கண்டவாறு கூறினார். அவர் பேசியவிபரம் வருமாறு:

''திருகோணமலையில் ஜூன் 3-ம் திகதி ஆரம்பத்த சில வன்முறைச் சம்பவங்கள் தொடர்ந்தும் இடம்பெற்றன, மொத்தமாக இங்கு 370 சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இதில் 21

(6-ம் பக்கம் பார்க்க)

## "பாராளுமன்றத்திற்கு இனி வரமாட்டேன்"
### சாவகச்சேரி 'நவம்' அறிவிப்பு

(கொழும்பு)

1977 ஜூலை மாதம் 17ம் தேதி நான் சாவகச்சேரித் தொகுதி மக்களால் ஆறு ஆண்டுகளுக்கு எம். பியாகத் தெரிவு செய்யப்பட்டேன். எனது ஆறு ஆண்டு பதவிக் காலம் இன்றுடன் முடிவடைகிறது. நான் இனிமேல் பாராளுமன்றம் வரமாட்டேன். இதுவே நான் கலந்துகொள்ளும் கடைசிக் கூட்டமாகும்''

பாராளுமன்றத்தில் நேற்றுப் பேசுகையில், சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு. நவரத்தினம் மேலும் பேசுகையில் ''எனது சாவகச்சேரித் தொகுதிப் பிரதிநிதித்துவம் அக்டோபர் 21ம் தேதியுடன் முடிவடைகிறது, அதுவரை தமிழ் மக்களை ஒரு கொடியின்கீழ் ஒன்றுபடுத்த சகல முயற்சிகளையும் எடுப்பேன்'' என்றார், (இ-க)

## யாழ். மாவட்டத்தில் சைக்கிள் பாவனையாளர் விசேட அனுமதிபெறத்தேவையில்லை

(கொழும்பு)

யாழ். மாவட்டத்தில் சைக்கிள்கள் பாவிப்பதற்கு விசேட அனுமதி ஏதும் பெறவேண்டியதில்லை என்று பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் சைக்கிள் பாவனை செய்வோர் விசேட அனுமதி பெறுவதற்கு ஏற்பாடு செய்யப்படவேண்டுமென பாதுகாப்பு அமைச்சுக்கு முன்னர் ஆலோசனை தெரிவிக்கப்பட்டிருந்ததென்றும், ஆனால் அவ்வாலோசனையை அமுல் நடத்துவது கடைசி நிமிடத்தில் கைவிடப்பட்டது என்றும் தெரியவருகின்றது.

யாழ். மாவட்டத்தில் சைக்கிள் பாவனையாளர்கள் விசேட அனுமதியை இராணுவ அதி

(6-ம் பக்கம் பார்க்க)


## அறிவித்தல்

நியூகோ றேடிங் கம்பனியாருக்கு உப்பு இழுத்த லொறியாளர்கள் தற்சமயம் உப்பு ஏற்றுமதி நடப்பதால் உங்கள் லொறிகளை அனுப்பவும். தேவையான டீசல் எம்மால் வழங்கப்படும். ஏற்றுமதிக்கான கட்டணம் உடனுக்குடன் வழங்கப்படும்.

நியூகோ றேடிங் கம்பனி,
காங்கேசன்துறை.
போன் : 25.

(8059)


## வட பகுதிக்கு எரிபொருள் அனுப்பப்படும்
-பிரதமர்

(கொழும்பு)

வடபகுதிக்கு உணவு மற்றும் எரிபொருட்கள் அனுப்பிவைக்கப்படுமென்று பிரதமர் நேற்றுப் பாராளுமன்றத்தில் தெரிவித்தார். [மா]


நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோவில்
திருக்குடமுழுக்கு (மகாகும்பாபிஷேகம்) பற்றிய

## அறிவித்தல்

கோவிலின் நித்திய பூசகர்கள் அறங்காவலர் சபைக்கு எதிராகத் தாக்கல்செய்துள்ள வழக்குக் காரணமாக **14-7-1983ல் நடைபெறவிருந்த மேற்படி கும்பாபிஷேகம் 28-8-1983 ஞாயிற்றுக்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.**

**குறிப்பு:** கும்பாபிஷேகம் தொடர்பான யந்திர பூஜைகள் 11-7-83 திங்கட்கிழமை மாலை 5-00 மணி தொடக்கம் ஆரம்பமாகியுள்ளன. கர்மாரம்பம் 19-8-83 வெள்ளிக்கிழமையும், யாகாரம்பம் 24-8-83 புதன்கிழமையும், பிம்பஸ்தாபனம் 26-8-83 வெள்ளிக்கிழமையும் நடைபெறும். மகாகும்பாபிஷேகம் 28-8-83 காலை 6-05 தொடக்கம் 7-15 வரையான சுபமுகூர்த்தத்தில் நடைபெறும்.

அறங்காவலர் சபை.

(8032)

## வரி விளம்பரம்

### தேவை

சகல விதமான மின்சார பைப் வகைகளும் உபகரணங்களும் விற்பனையில் 5 வருட அனுபவம் உள்ளவர் உடன் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். வயதெல்லை 30 — 40. விண்ணப்ப முடிவுத் திகதி 30-7-83. அனுப்பவேண்டிய விலாசம்: ஆ. சுந்தரமூர்த்தி, 3-ம் கட்டை, கே. கே. எஸ். ரோட், கொக்குவில். (8044)

### பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

உரும்பிராய், உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற முத்தையா சுவாமிநாதன் என்பவரின் மரணசாதன மில்லா மரணச் சொத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர் முத்தையா சுவாமிநாதன் கைம்பெண் யோகல்லா-உரும்பிராய் கிழக்கு உரும்பிராய் மனுதார்

மரணசாதன நியாயாதிக்கம் இல. 162

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1983-ம் ஆண்டு ஆவணி மாதம் 24ஆம் நாளன்று முற்பகல் 9-15 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுன தாக்கப்படலாகாதென்பதற்கு காரணங் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக்கட்டளைப்படி
**ஆ. சிவபாதசுந்தரம்**
பதிவாளர்

1983-ம் ஆண்டு ஆவணி மாதம் 6ஆம் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

என்னுல் வரையப்பட்டது.

செ. இராமலிங்கம்
மனுதாரின் சட்டத்தரணி
7762

### விற்பனைக்கு

கிளிநொச்சி கரடிப்போக்கு சந்திக்கு அருகாமையில் அரிசி ஆலைவிற்பனைக்குண்டு. விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 8050, மே/பா, ஈழநாடு, யாழ்ப்பாணம். 8050

### சேவை

உங்கள் இல்லங்களுக்கு வந்து எவர்சில்வர் பாத்திரங்களுக்கு பெயர் வெட்டி கொடுக்கப்படும். ஒரு எழுத்து 25 சதம். விபரங்களுக்கு: எல். சத்திவேல், 131, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (8057)

### வாடகைக்கு

யாழ்.புகையிரத நிலைய வீதியிலுள்ள (சந்தி) கடை வாடகைக்கு விடப்படும். தொடர்பு கொள்ளவும். 671, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (8055)

### கல்வி

ஒரு மாதத்தில் செய்முறையுடன் வெல்டிங், வயரிங், மோட்டார் மெக்கானிசம் கற்பிக்கப்படும். சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த சான்றிதழ் வழங்கப்படும். ஆரம்பம்: 22- 07- 83. The Jaffna Engineeirng College J.E.C. (யாழ். புகையிரதக் கடைவைக் கருகில்), 33, பருத்தித்துறை வீதி. யாழ்ப்பாணம். 8038

London Exams - May 1984 C. E. I. Part 1 May 1984 A/L இருபாடங்களுடன் தோற்றலாம். City and Guilds May 1984 O/L ஆடன் தோற்றலாம். ஆரம்பம்: 23- 7- 83. The Jaffna Engineering College. J. E. C., 33, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (யாழ்.புகையிரதக் கடைவைக்கருகில்) 8039

### குளிர்சாதனப்பெட்டி பழுதடைந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ். பெரியாஸ்பத்திரி பிரேத அறையிலுள்ள குளிசாதனப்பெட்டியொன்று பழுதடைந்துள்ளதால் பிரேதங்கள் பாதுகாப்பாக வைக்க முடியாதுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இக்குளிர்சாதனப் பெட்டியைத் திருத்தி அமைப்பதற்கு கொழும்பிலிருந்து நிபுணர்களை வரவழைப்பதற்கான நவவடிக்கைகளை வைத்திய அதிகாரி மேற்கொண்டுள்ளார். (மா)


### தேவை

மின்சார உபகரணங்கள் விற்பனை செய்வதில்
சிறந்த அனுபவமுள்ள
**மனேஜரும் விற்பனையாளரும் தேவை.**
தகுதிக்கேற்ப சம்பளம் கொடுக்கப்படும்.
சம்பளத்தை நேரிலும் பேசிக்கொள்ளலாம்.
வேலை செய்த இடங்களின் நற்சாட்சிப் பத்திரத்தின் பிரதியையும் அனுப்பவும்.
யாழ். மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.
விற்பனை அனுபவம் உள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பிக்கவும்.
**முடிவுத் திகதி: 25-7-83**
**விளம்பர இல: 101**
C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம்.


## காலமான உபதபாலதிபர் குடும்பத்துக்கு நிதி உதவி

(வண்ணார்பண்ணை)

அண்மையில் காலஞ்சென்ற முருசுமோட்டை உபதபாலதிபர் திரு எஸ்.சேனுதிராசாவின் குடும்பத்திற்கு அகில இலங்கை தமிழ்பேசும் உபதபாலதிபர்கள் சங்கம் இச்சங்க சகாயநிதியில் ஒருபகுதியை வழங்கியது.

மேற்படி சங்கத்தின் தலைவர் திரு ஐ.நடராசா, யாழ். மாவட்டக் கிளையின் தலைவர் திரு சி.இரத்தினசபாபதி பொருளாளர் திரு அ.ஸ்ரனிஸ்லாஸ்ஆகியோர் அமரர் சேனுதிராசாவுக்குரிய சகாய நிதிப் பணத்தில் ஒருபகுதியை முற்பணமாக திருமதி சேனுதிராசாவிடம் கையளித்தனர்.

## சிரமதான வேலை

(வண்ணார்பண்ணை)

புங்குடுதீவு இளம் தமிழர் மன்றத்தின் ஆதரவில் நடைபெற்றுவரும் புங்குடுதீவு பாணுவிடை சிவன்கோவிலுக்குச் செல்லும் கடற்கரை அணைக்கட்டு வீதியின் சிரமதானவேலை இதுவரை இரண்டாயிரத்து ஐந்நூறு அடி தூரத்தைக் கடந்துள்ளது.

இச் சிரமதானப்பணியில் மேலும் இரண்டாயிரம் அடி வேலையை தேசிய இளைஞர் சேவை மன்றம் செய்யவிருக்கிறது. இதற்கென யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவை மன்றம் 24,000 ரூபாவை இச் சிரமதான வேலைக்கென ஒதுக்கியுள்ளது.

## எம். ஜி. ஆர். கருணாநிதிக்கு அழைப்பு

(மன்னார்)

மன்னாரில் இம்மாதம் 23ம், 24ம் திகதிகளில் நடைபெற விருக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாநில மகாநாட்டில் கலந்துகொள்வதற்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும், கிராமியத் தொழில்துறை அமைச்சருமான திரு. எஸ். தொண்டமான், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பொதுச்செயலாளர் திரு. எம். எஸ். செல்லச்சாமி, இலங்கை ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஜனுப் ஏ. அஸீஸ் ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தமிழ்நாட்டின் தலைவர்களான முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன், தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதி, முரசொலி மாறன் ஆகியோருக்கும் மகாநாட்டில் கலந்துகொள்ள அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. [சூ]

## யாழ். கல்விக் கந்தோர் கடமை நேரங்கள்!

(கல்வியங்காடு)

யாழ். மாவட்ட கல்விக் கந்தோரில் கடமையாற்றுபவர்களில் தூரஇடங்களில் இருந்து வருகின்றவர்கள் ஒரு மணியுடனும், கல்விக் கந்தோருக்கு அருகில் இருப்பவர்கள் மாலை 4-15 மணியுடனும் கடமை முடியும் நேரமாக வைத்துக் கொள்ளவேண்டுமென்று கல்வியமைச்சு, யாழ். மாவட்ட கல்விக் கந்தோருக்கு அறிவித்துள்ள சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளது.

ஊர்காவற்றுறையில்

# பனைநார்த்தொழில் பயிற்சி நிலையம்

(வண்ணார்பண்ணை)

ஊர்காவற்றுறையில் பனைநார்த்தொழில் பயிற்சி நிலையம் ஒன்றை ஆரம்பித்து நடத்துவதற்கான திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளதாக இந்திய பனைத்தொழில் நிபுணரும், ஐ. நா. ஸ்தாபனத்தின் தொழில்ஆய்வாளருமான திரு. கே. சம்பந்தம் தெரிவித்தார்.

பனைநாரின் மூலம்நாற்காலி, கட்டில் போன்ற தளபாடங்களை பின்னுவதற்கு இப்பயிற்சி நிலையத்தில் பயிற்சி கொடுக்கப்படும் என்றும் அவர் கூறினர்.

அண்மையில் தீவுப்பகுதிக்கு சுற்றுலா மேற்கொண்ட திரு. சம்பந்தம் எழுவைதீவுக்குச் சென்று அங்குள்ள நார்த் தொழில் செய்பவர்களை நேரில் சந்தித்து உரையாடினர். இத் தொழில் தொடர்பாகவும் ஆய்வு நடத்தினர்.

ஊர்காவற்றுறையில் இந்த நார்த்தொழிலை சிறப்பாக நடத்தமுடியும் என்று சுட்டிக்காட்டியுள்ள திரு. சம்பந்தம் இதை நடைமுறைப்படுத்துவதற்கான ஆலோசனைகளை பனைஅபிவிருத்திச் சபைக்கும், அரசாங்க அதிபருக்கும் வழங்கியுள்ளதாகவும் தெரிவித்தார்.

## வட்டு. லயன்ஸ் கழகத்தின் பதவியேற்பு வைபவம்

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தின் 1983/84 வருட காலத்திற்கான புதிய நிர்வாகிகளின் உத்தியோக பூர்வமான பதவியேற்பு வைபவம் சங்கானையிலுள்ள வட்டு லயன்ஸ் கழகத்தின் புதிய தலைவர் வைத்திய கலாநிதி எஸ். நாகநாதனின் இல்லத்தில் நடைபெற்றது.

இவ்வைபவத்தில் பிரதம அதிதியாக யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா கலந்து கொண்டு ஆசியுரை வழங்கினர்.

முன்னுள் பிரதி மாவட்ட ஆளுநர் திரு. எஸ். தெய்வேந்திரம் புதிய நிர்வாக சபையினரின் பதவிப் பிரமாணத்தை நடாத்தி வைத்தார். புதிய தலைவராகப்பதவி ஏற்ற வைத்திய கலாநிதி எஸ். நாகநாதன் உரை நிகத்துகையில்; வட்டு லயன்ஸ் கழகம் இப்பகுதியில் இதுவரை காலமும் ஆற்றிவந்த சமூகசேவைகளை தமது பதவிக்காலத்தில் தொடர்ந்தும் சிறப்பான முறையில் ஆற்றிவரப்படும் என்றும் இதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்றும் கூறினர்.

இவ்வைபவத்தில் பிரதி மாவட்ட ஆளுநர் லயன் கே. குணரத்தினம், வலையத்தலைவர் லயன். இ. விஜயரத்தினம் யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீட பேராசிரியர் டாக்டர் என். சரவணபவானந்தன், சாவகச்சேரி லயன்ஸ்கழகத் தலைவர் லயன். எம். முத்துக்குமாரசாமி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி அதிபர் திரு. ஏ. ராஜன் கதிர்காமர் ஆகியோர் உட்பட மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## நடப்பு வருட நிர்வாகிகள்

(மட்டுவில்)

மட்டுவில் மகாவித்தியாலயத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் அதிபர் திரு. த. காசிநாதன் தலைமையில் நடைபெற்றது. அதன் நடப்பு வருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: அதிபர் த. காசிநாதன், செயலாளர்: சி. கந்தசாமி, பொருளாளர்: ஏ. ஆனந்தக்கதிரமலை மேலும் 15 உறுப்பினர்களைக் கொண்ட பெற்றார் ஆசிரியர் நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது

## எரிபொருள் விற்பனை ஸ்தம்பிதம்

(மன்னார்)

பேசாலை-இலைத்தோப்பு எரிபொருள் விற்பனை நிலையத்தில் கடந்த சில வாரங்களாக எரிபொருள் விற்பனை ஸ்தம்பிதமடைந்துள்ளது,

இங்குள்ள இயந்திரம் அடிக்கடி பழுதடைந்து வருவதாலேயே எரிபொருள் விற்பனை ஸ்தம்பிதமடைந்துள்ளது.

இதனுல் இப்பகுதி மீனவர்களும், வாகன உரிமையாளர்களும் பெரும்பாதிப்படைந்துள்ளனர். (சூ)

## யாழ். மாவட்ட கூட்டுறவு மகளிர் கருத்தரங்கு

(பண்டத்தரிப்பு)

யாழ். மாவட்டத்திலுள்ள கூட்டுறவு மகளிர் குழு உறுப்பினர்களின் நலன்கருதி ஆங்கில டிப்ளோமா பயிற்சி வகுப்பு ஒன்றை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடாத்துவதற்கு யாழ். தேசிய கூட்டுறவுச் சபை நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

யாழ். தேசிய கூட்டுறவுச் சபையின் செயலாளர் திரு. எஸ். சிவசுப்பிரமணியம், யாழ். மாவட்ட கூட்டுறவு மகளிர் குழுத் தலைவி திருமதி. சகிதேவி கந்தையா ஆகியோர் இப்பயிற்சியை விரைவில் நடத்துவதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## புதன் கிழமைகளில் மூடப்பட்டிருக்கும்

(கொழும்பு)

பிரிட்டிஷ் தூதராலயத்தின் வீஸா பிரிவு இனிமேல் புதன் கிழமைகளில் பொதுமக்களுக்கு மூடப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இப்பிரிவு திங்கள், செவ்வாய், வியாழன் வெள்ளி தினங்களில்காலை 8-15 முதல் பகல் 12-15 வரை திறந்திருக்கும். [அ]


சகலவித றேடியோ — ரி. வி — வீடியோ டெக் — மணிக்கூடுகள்
சிறந்த முறையில் திருத்திக்கொள்ள
**வீனஸ் றெக்கோடிங் றேடியோ வாச் வேக்ஸ்**
266/1, ஸ்ரான்லி வீதி, (ஸ்ரீதர் தியேட்டர் அருகாமை), யாழ்ப்பாணம்.

### மணிவாக்கு

அச்சம் சூழ்ந்த குழந்தைப்பருவத்திலே கண்டிப்பாக வேரோடு அகற்றப்படவேண்டியது:
அச்சஉணர்வே இளமைப்பருவத்தில் பலவித எதிர்ப்பியங்களுக்கும் அக்கிரமச் செயல்களுக்கும் அடிகோலுகின்றது.

— பேற்றிராண்ட் ரசெல்

# நமது நோக்கு

## தட்டுப்பாட்டை முறியடிக்க வேண்டியது தைரியம்

பணம் படிப்பு முதலியவைகளில் பிறரைப்போல் இருப்பதே சுகம் என்று எண்ணுகிறோம்: அடுத்த வீட்டு ஆள் இரண்டு கார் வைத்திருந்தால் எமக்குத் தூக்கம் குறைவு; அதால் ஏற்படும் நோய்கள் பல.

இன்றைய சமுதாய வாழ்வு கட்டுப்பாடற்ற முறையில் சிக்கலாய் விட்டதால் எந்த ஒரு எதிர்பாராத துன்பத்தையும் சமாளிப்பது சங்கடமாகின்றது.

எங்களுக்கு மேலான ஒரு பெரும் சக்தி-கடவுள் என்றது கசப்பான சொல்லென்றால்-எம்மைக் கொண்டு நடத்துவதென்ற உணர்வுண்டானால் எமக்கு வரும் தோல்வியும் துன்பமும் உயர்ந்த அன்பையும் உண்மையையும் அறிவிக்க வந்த அனுபவங்கள் என்பதுதென்படும். சான்றோர் வாழ்க்கையில் இதனைக்காண முடியாதவர் வெறும் பாமரரே!

இன்று நாம் எரிபொருள் தட்டுப்பாடு பற்றி எங்கள் தலையைப்போட்டு உடைப்பது சாதாரணம்.

காரை மற்றும் வாகனங்களை தற்காலிகமாகவாவது கராச்சில் பூட்டி வைக்க மனத்துணிவு வர இன்றைய வேக வாழ்வில் இடமில்லை; அனைத்துலகிலுமே இவ்வித தட்டுப்பாடு அடிக்கடி நிகழும் சாத்தியம் உண்டு.

கியூவில் நின்றும் பலனில்லாத நிலைமையை நாம் நாடுவது விவேகமா எவ்வாறு எரிபொருள் விநியோகிக்கப் படுகிறது என்றதை விளக்கிய உயர் அதிகாரி அரசாங்க திணைக்களங்களும் கூட்டுத்தாபனங்களும் மிகக்கூடியபங்கை விரயமாக்குகின்றன என்று குறிப்பிட்டிருக்கிறார்.

வீட்டுஉபயோகத்துக்கு 17 சதவிதமே தேவைப்படுகிறதாம்.

தனியார் உபயோகத்தைக் கட்டுப்படுத்தினாலும் அரச கூட்டுத்தாபன வாகனங்களை எவ்வாறு மட்டுப்படுத்துவது?

அரசசேவை என்றால் அது ‘ஓசி (FOB) ல்’ ஓடுவதென்று கொள்வது எங்கள் தேசப்பற்றுக்கு நல்ல விளம்பரம்.

இதன் அர்த்தம் என்ன? அரசுவேறு; மக்கள் வேறென்பது மட்டுமல்ல; அரசுக்கேற்படும் பொருளாதார நெருக்கடி எம்மைத் தாக்காதென்ற அடிப்படை மயக்கம்.

அதுமட்டுமல்ல; என்ன வகையிலும் நிலைமை கடந்த காலத்தில் நடந்தது போல சீராகும்; எனவே இப்போது ‘ஆற்றிலே போவதை அண்ணை பிடி தம்பி பிடி’ யென்ற பொறுப்பற்ற மனப்போக்கு உலக நெருக்கடி புரியாத சுயநல வாதிகள் நிறைந்த நாடு இது.

சுதந்திரநாட்டில் இந்த நிலை வலுப்பெற்றால் அபிவிருத்தித்திட்டங்கள் பலனளிக்குமென்று நம்புவதெப்படி?

இலகுவில் மீட்க முடியாத கடன் பட்ட நிலையில் நாடு ஓடிக் கொண்டிருக்கும் போது அதனைக் குட்டிச் சுவராக்கும் சாதனைகளில் ஈடுபடும் ஒவ்வொரு அரசாங்க ஊழியரும் அதிகாரியும் அரச விரோதத்துக்காளானவர்; ஏன் சமூக விரோதியுங்கூட!

பல அவசியமற்ற செலவீனங்களை ஒழிப்பதே இன்றைய முதற் கடமை; நடக்கக்கூடிய தூரத்துக்கு பஸ் வண்டியைக் காத்திராமல், சைக்கிளில் போக முடியுமானால் கராச்சில் காரைப் பூட்டுவது மிக அவசிய கடமைகள்;

எரிபொருள் தட்டுப்பாடென்றால் ‘பல்லைக் கடித்துக்’ கொண்டு எப்போது காரை ஓடலாமென்று தவமிருப்பதல்ல.

மிக அத்தியாவசியமான தேவைகளுக்கே மோட்டார் வாகனம் உபயோகிக்கும் பழக்கத்தை இந்த வறுமை நிலை கற்பிக்கவேண்டும்.

தினசரி வாழ்வின் மற்றைய தேவைகள் தீவிரமாகப் பாதிப்படையுமென்பதைவிளக்கத்தேவையில்லை இதுதான் தருணமென்று விலையைப் பெருக்கிவிடும் வியாபாரிகளை என்னென்று சொல்வது?

மழையின்மையால் நேரிட்ட நட்டங்கள் கணக்கில் அடங்கா; இருப்பினும் வீட்டுத்தோட்டமும், சமையலுக்கு வேண்டிய விறகும் ஒவ்வொரு சாதாரண குடியானவரின் வங்கிச் சேமிப்புப் போன்றவை.

நீரையும் மின்சக்தியையும் மிகச்சிக்கனமாக உபயோகிக்கும் அவசியம் இன்றைய பற்றாக்குறை நிலையை சமாளிக்க மட்டுமல்ல; சிக்கன வாழ்வின் சிறப்பை உணர்ந்து எக்காலகட்டத்திலும் நாம் உயிர் வாழவல்ல வழியென்றும்; அதிலும் முக்கியம் தம்மைப்போல பல்லாயிரம் மக்கள் அதனால் பயன்படுவார்களென்ற சமுதாய பொறுப்புணர்வை விருத்தி செய்வதற்கு.

எந்த வறுமையையும் விரட்டவல்ல நம் முன்னோர் தன்னிறைவுகாணும் ஒருசமுதாய அமைப்பை விட்டுச் சென்றனர்.

றெயில் பஸ் ஓடினாலென்ன, ஓடாவிட்டாலென்ன, வறட்சி, வெள்ளம் எம்மைச்சோதனைக்குள்ளாக்கினாலென்ன, ‘உண்பது நாழி உடுப்பது நான்கு முழ’மென்ற கடினகட்டுப்பாடுவறண்டயாழ்ப்பாணத்தில்சிறந்த பண்பை என்றும் எடுத்துரைக்கும்.

## ரூ. 10,000 ஒதுக்கீடு

(மட்டுவில்)

நாவற்குழி பொதுநூல் நிலையத்தின் தளபாடங்கள், புத்தகங்கள், சஞ்சிகைகள் கொள்வனவு செய்வதத்காக சாவகச்சேரி எம். பி. 10.000 ரூபாவை பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்துள்ளார்.

# „மாணவர்களிடம் உயரிய குணங்களைக் காணமுடிகிறது!”

## மகாஜனாவில் பேராசிரியர் கனகசுந்தரம்

(மாவிட்டபுரம்)

‘‘மாணவர்களின் மத்தியில் கல்வி போதிக்கும் போது கடவுளின் உயரிய குணங்களை அவர்களிடம் காணமுடிகிறது.

இவ்வாறு யாழ். பல்கலைக் கழக மருத்துவ பீடத்தலைவர் பேராசிரியர் திரு. இ. கனகசுந்தரம் தெல்லிப்பளை மகாஜனக்கல்லூரி உயர்வகுப்பு மாணவர்கள் மன்ற தேநீர் விருந்து வைபவத்தில் கலந்து உரையாற்றுகையில் கூறினார்.

கல்லூரி மண்டபத்தில் செல்வன் ரகுலன் தலைமையில் நடந்த இவ்வைபவத்தில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

கடவுள்தன்மை வாய்ந்த மாணவர்கள் பரிசுத்த மாணவர்கள் மாணவர்களில் கெட்ட குணம் உள்ளவர்கள் என்று யாரையும் பிரிப்பதில்லை. அவர்களிடத்தில் சேவையாற்றும் போது ஆண்டவனுடைய உயரிய குணங்களை அவர்களிடம் காணலாம், இன, மத, மொழி வேறுபாடுகளை எல்லாம் தாண்டி இந்த கடவுள் தன்மை எல்லா மாணவர்களிடமும் உண்டு.

தூயஅன்பு பாகுபாடில்லா சகோதரத்துவம் எல்லாவரம்புகளுக்கும் அப்பாற்பட்ட சக்தி இவை உலகில் உள்ள எல்லா மாணவர்களிடமும் காணமுடியும் மாணவர்கள் வளர்ந்து பெரியவர்களானதும் விரக்தியடைகிறார்கள். அப்போது தம் தூய்மையை இழக்கிறார்கள். இந்த உண்மையை கிழக்கு ஐரோப்பா நாட்டிலும்கூடான் சிங்கப்பூர், மலேசியா ஆகிய இடங்களில் வேலை செய்யும் போது கண்டேன்.

ஆகவே மாணவசமுதாயம் சாதி, மத, மொழி என்ற எல்லைகளுக்கு அப்பால் யோசித்து செயலாற்ற வேண்டும். சமூக ஊழல்கள் சீதன முறை சாதிஅமைப்பு போன்றவற்றுக்கு அடிமைப்படாமல் வாழப்பழக வேண்டும் என்றார்.

## இராமகிருஷ்ண ஜெயந்தி கட்டுரைப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். ஸ்ரீ இராமகிருஷ்ண சேவாசிரமம் ஸ்ரீ இராமகிருஷ்ண ஜெயந்திவிழாவையொட்டி கட்டுரைப்போட்டி ஒன்றை நடத்துகின்றது. வருடம் தோறும் பேச்சுப் போட்டியை நடாத்தும் இந்த ஆச்சிரமத்தினர் பிரயாண நெருக்கடியை உத்தேசித்தே இவ்வருடம் கட்டுரைப் போட்டியை நடாத்துவது குறிப்பிடத்தக்கது.

இக்கட்டுரைப் போட்டி 11-9-83-ல் காலை கொக்குவில் இந்துக்கல்லூரியில் நடைபெறும். போட்டியில் பங்குபற்ற விரும்புவோர் 5-8-83க்குமுன் தாங்கள் விண்ணப்பத்தை கொக்குவில் இராமகிருஷ்ண சேவாச்சிரமத்திற்கு அனுப்பிவைக்க வேண்டும்.

கட்டுரைப்போட்டி கீழ்ப் பிரிவு, மேற்பிரிவு என மூன்று பிரிவுகளாக நடைபெறும்.

1-9-70-ம் ஆண்டுக்குப் பின் பிறந்தோர் கீழ்ப்பிரிவுப் போட்டிக்குத் தோற்றலாம். இவர்களின் கட்டுரை விடயங்கள் ஸ்ரீஇராமகிருஷ்ணர் தூய அன்னை சாரதா தேவியார், வீரசந்நியாசி விவேகானந்தர் என்பனவாகும். 1-9-66க்கும் 70க்கும் இடையில் பிறந்தோர் மத்திய பிரிவுப் போட்டியில்கலந்துகொள்ளலாம்இராமகிருஷ்ணரின் சமயசாதனை, அன்னை சாரதா தேவியாரின் புனித வாழ்க்கை சுவாமி விவேகானந்தரின் போதனை என்பன மத்தியபிரிவுக்குரிய கட்டுரை விடயங்களாம்.

1-9-63 க்கும் 66 க்கும் இடையில் பிறந்தோர் மேற்பிரிவுப் போட்டியில் கலந்து கொள்ளலாம். இவர்களின் கட்டுரை விடயங்களாவன ஸ்ரீஇராமகிருஷ்ணர் எமக்களித்தபோதனை, அன்னையே உருவான சாரதா தேவியார், சுவாமிவிவேகானந்தரின் வாழ்வும் பணியும் என்பனவாகும்.

## “சுகாதார அபிவிருத்தியில் பின்தங்கியுள்ளது”

(கிளிநொச்சி)

‘‘பாடசாலைச் சிறுவர்கள் சுகாதாரப் பழக்க வழக்கங்களைக் கடைப்பிடிக்கப் பெற்றோரும், ஆசிரியர்களும் வழி செய்யவேண்டும். அதன்மூலம் ஆரோக்கியம்மிக்க சமுதாயம் ஒன்றை உருவாக்க முடியும்.’’

இவ்வாறு கரைச்சி லயன்ஸ் கழக ஆதரவில் கிளிநொச்சி கிராமோதய சபை நடத்திய சுகாதார விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் கிளிநொச்சி மாவட்ட வைத்திய அதிகாரி பி. நவரத்தினராசா கூறினார்.

கிளிநொச்சி கனகாம்பிகைகுளம் அரசினர் வித்தியாசாலையில் அதிபர் பொன். தில்லைநாயகம் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் கிளிநொச்சி எம். பி. திரு. வி. ஆனந்தசங்கரி பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

இவ்விழாவில் நோயாளிகளுக்கு இலவச சிகிச்சைகளும் அளிக்கப்பட்டதுடன், ஒருவயதிற்குட்பட்ட ஆரோக்கிய குழந்தை தெரிவுப்போட்டியும் இடம்பெற்றது.

கல்லூரி அதிபர் பொன். தில்லைநாயகம் தமது தலைமையுரையில் கூறியதாவது:-

‘‘கிளிநொச்சிப் பகுதி சுகாதார அபிவிருத்தியில் மிகவும் பின் தங்கிய நிலையிலேயே இருந்து வருகிறது. பாடசாலைகளில் இடவசதி பற்றாக்குறை, அரச அலுவலகங்களில் போதிய இடவசதியின்மை போன்றவையும் சுகாதார சீர்கேடுகள் அதிகரிக்கக் காரணமாகிறது.

‘‘சுகாதார ஊழியர்கள், உத்தியோகத்தர் டாக்டர்கள் தட்டுப்பாடும் நமது பகுதியில் நிலவுகிறது. இந்நிலையில் நமது சுயமுயற்சியின் மூலம் சுகாதார வசதிகளைப்பெருக்க நாம் ஒவ்வொருவரும் முன்வரவேண்டும்.

கிளிநொச்சி கிராமோதய சபைத்தலைவரும், பிரதேச சபைத்தலைவருமான நா. சுப்பிரமணியம், கரைச்சி லயன்ஸ் கழகத் தலைவர் டாக்டர் க. தணிகாசலம் சுகாதார வைத்திய அதிகாரி திருமதி என். கந்தசாமி ஆகியோரும் உரையாற்றினார்கள்.

### பண்டத்தரிப்பு

## அரசினர் வைத்தியசாலையை அபிவிருத்தி செய்யவேண்டும்

### கிராமோதய சபை வட்டு. எம்.பி.க்கு மகஜர்

(பண்டத்தரிப்பு)

‘‘பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலை வட்டுக்கோட்டைத்தொகுதிக்கும், காங்கேசன்துறை தொகுதிக்கும் இடையில் எல்லையாக அமைந்துள்ளது. கடந்த 30 வருடங்களாக எவ்வித அபிவிருத்தியும் இல்லாது இருக்கும் இவ்வைத்தியசாலையில் பிரசவ வார்ட் ஒன்றையும், டாக்டர்கள் தங்கும் விடுதி ஒள்றையும் அமைப்பதற்கு சுகாதார திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு நிதி ஒதுக்கீடு செய்து தருமாறு வேண்டுகின்றோம்.’’

இவ்வாறு பண்டத்தரிப்பு கிராமோதய சபைப் பகுதியில் மேற்கொள்ளப்பட வேண்டிய அவசிய அபிவிருத்தி வேலைகள் குறித்து சபையின்சார்பில் வட்டுக்கோட்டை எம். பி. கலாநிதி நீலன் திருச்செல்வத்திடம் கையளித்துள்ள மகஜர் ஒன்றில் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற விசேட பொதுக் கூட்டத்தில் வைத்து சபைத்தலைவி திருமதி பேளி அத்தனுசியார் இந்த மகஜரை வட்டு எம்.பி.யிடம் கையளித்தார்.

இந்த மகஜரில் இடம் பெற்றுள்ள ஏனைய கோரிக்கைகள் பின்வருமாறு:-

‘‘சில்லாலைப் பகுதியில் ஒரு கைத்தொழில் மண்டபமும், பண்டத்தரிப்புப் பகுதியில் ஒரு கைத்தொழில் மண்டபமும் அமைப்பதன் மூலமும் இப்பகுதி படித்த இளைஞர்கள், யுவதிகள் ஆகியோரின் வேலையில்லாப் பிரச்னையை நீக்குவதற்கும், பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும்.

இத்திட்டத்திற்கு ஒரு லட்சம் ரூபா ஒதுக்கித்தரப்படல் வேண்டும்.

‘‘விவசாயிகள் கடற்றொழிலாளர்கள் ஆகியோருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் நன்கு பிரயோசனப்படும் வீதியான சில்லாலை தும்பளப்பாய் வீதியைப் புனரமைப்புச் செய்வதற்கு மூன்று இலட்சம் ரூபா ஒதுக்கித்தரப்படல் வேண்டும், இதற்கு இவ்வருடம் ஒதுக்கப்பட்ட 30 ஆயிரம் ரூபாவைக் கொண்டு வேலைகளை ஆரம்பிக்க தாங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்,

‘பண்டத்தரிப்பிலும், சில்லாலையிலும் மின்சார பாவனையாளரின் நலனை முன்னிட்டு இரு மின்கடத்தி சாதனங்களை (ரான்ஸ் போமர்) அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும்.

‘‘சில்லாலை றோமன் கத்தோலிக்க த. க. பாடசாலைக்கு விளையாட்டு மைதானம் அமைப்பதற்கு காணியொன்றைசுவீகரிப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்துதரப்பட வேண்டும்.

‘‘பண்டத்தரிப்பு - கீரிமலை வீதியில் பிரதான குடியிருப்பு பகுதிகளில் மாரிகாலங்களில் வெள்ளம் தேங்கி நின்று அப்பகுதி மக்களுக்கு பெரும் பாதிப்பு ஏறபடுத்துவதால் வெள்ளம் வெளியேற ஏற்ற ஒழுங்குகளை விசேட நிதி ஒதுக்கீட்டின் மூலம் நிறைவு செய்தல் வேண்டும்.

‘‘சில்லாலை இலங்கை மாதா சனசமூக நிலையத்திற்கு மின் இணைப்புச் செய்வதற்கு 10 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கி உதவ வேண்டும்.

# பிரிட்டனில் வெளிநாட்டுப் பண்டங்கள் இறக்குமதி அதிகரித்து வருகின்றது

## வேலையற்றோர் எண்ணிக்கை இலட்சக்கணக்காக அதிகரிக்கும் நிலை!

லண்டன், ஜூலை. 21

பிரிட்டனில் வெளிநாட்டுப் பொருட்களின் இறக்குமதிஅதிகரித்துவருகின்றதென்று இறக்குமதி ஆய்வுஅறிக்கையொன்று தெரிவித்துள்ளது. தற்போது இங்கு இறக்குமதி அளவு 28.7 ஆகக்காணப்படுகின்றது. முன்னைய ஆண்டுகளில் இத்தொகை 25.5ஆகவே இருந்து வந்தது.

இறக்குமதிப் பண்டங்கள் பிரித்தானிய சந்தையை இவ்வாறு பெருமளவில் கைப்பற்றத் தொடங்கியிருப்பதால் இங்கு பொருளாதார ரீதியிலான தாக்கங்கள் எதிர்காலத்தில் பலமாக இருக்குமென்று பொருளியல் நிபுணர்கள் கருதுகின்றனர்.

1982ம் ஆண்டில் பிரித்தானிய சந்தைகளில் காணப்பட்ட வீட்டு மின்பாவனைப் பொருட்களில் எழுபது சதவீதமானவை இறக்குமதிப் பண்டங்களாகும். இத்துடன் எண்பத்தியெட்டு சதவீத கறுப்பு-வெள்ளை நிறத்தொலைக்காட்சி பெட்டிகளும் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டனவாகவே காணப்பட்டன.

இவற்றுடன் காற்சட்டை, உட்பட பலவகையான ஆடைகளும் இங்கு இறக்குமதிப்பண்டங்களாகவே உள்ளன. இவ் இறக்குமதிப் பொருட்களையே பிரித்தானியர் பெருமளவில் விரும்பி வாங்குகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மோட்டார்கார்கள் பிரிட்டனில் அதிகளவு இறக்குமதியாவதில்லை. ஏனெனில் இங்கு தயாராகும் மோட்டார் வாகனங்களுக்கே இங்கு பெருமளவு கிராக்கி காணப்படுகின்றது.

பிரிட்டனின் தற்போதைய இறக்குமதிப்போக்கு பற்றிய விமர்சனமொன்றில், தசம் எட்டு வீதமாக வருடமொன்றுக்கு பிரிட்டனின் இறக்குமதி அதிகரித்துச் செல்லுமாயின் 1987ம் ஆண்டளவில் இங்கு வேலையற்றோர் எண்ணிக்கை 40 லட்சமாகக் காணப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. தற்போது இங்கு 30 லட்சம் பேர் வேலையில்லாதுள்ளனர். வேலைவாய்ப்பு பெற்றோரில் பலர் ஒரு வேலையைப் பகிர்த்து செய்து வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (கி)

# லெபனனில் இஸ்ரேலின் புதிய பாதுகாப்பு எல்லை!

பெய்ரூட், ஜூலை 21

லெபனனிலுள்ள இஸ்ரேலிய துருப்புக்கள் தமது பாதுகாப்பு எல்லையை புதிய இடத்துக்கு மாற்றியுள்ளன. நேற்றிலிருந்தே இம்மாற்றம் இடம் பெற்றது.

இஸ்ரேலின் இந்த நடவடிக்கையை லெபனன் வெளிநாட்டமைச்சர், பாதுகாப்பமைச்சர் ஆகியோர் தீவிரமாகக் கண்டித்துள்ளனர்.

லெபனன் ஜனுதிபதி திரு. அமின் ஜமாயல் தற்போது வாஷிங்டனில் அமெரிக்க அதிபர் திரு. ரெனல்ட் றீகனைச் சந்தித்து பேச்சுக்களை நடத்தி வருகிறார். இஸ்ரேலிய பிரதமர் திரு. பெகினும் தனிப்பட்ட விஜயமொன்றை அங்கு மேற்கொண்டுள்ளார்.

லெபனன் அதிபர் திரு. ஜமாயலும் இஸ்ரேலின் இந்த மாற்றத்தைக் கண்டித்துள்ளார். புதிய இடம் பெய்ரூட்டுக்கு சற்று வடக்கே அமைகிறது. 'பெக்கா' பள்ளத்தாக்குப் பகுதியில் இதுவரை இஸ்ரேல் இருந்துவருகிறது (கி)

# இந்திய, ஈரான் கூட்டுக்கமிஷன்: பல்வேறுதுறைகளிலும் ஒத்துழைக்க முடிவு!

தெஹ்ரான், ஜூலை. 21

இந்தியா, ஈரான் கூட்டுக்கமிஷன் நடவடிக்கைகள் சிறந்த பலனைத்தந்துள்ளன. இக்கூட்டுக்கமிஷன்களின் துணைக்கமிஷன்கள் கடந்த சிலதினங்களாக இருநாடுகளுக்கு மிடையிலான ஒத்துழைப்புகள் பற்றி ஆராய்ந்து பல ஆக்கபூர்வமான தீர்மானங்களை எடுத்துள்ளன.

இத்தீர்மானங்களின் அடிப்படையில் இந்தியா, ஈரானுக்கு தொழில்நுட்ப, கல்வி, விஞ்ஞான, கலாச்சார துறைகளில் ஒத்துழைப்புகளை வழங்வுள்ளது. ஈரானிய மற்றும் இந்திய உல்லாசபயணத்துறையும் விரிவாக்கப்படவுள்ளது.

ஈரான் இந்தியாவிடமிருந்து செய்திப் பரிவர்த்தனையை மேற்கொள்ளவிருக்கின்றது. இப் பரிவர்த்தனையின் கீழ் இருநாடுகளினதும் தொலைக்காட்சி, வானெலிச் சேவைகள் தமது நிகழ்ச்சிகளை பரிமாறிக்கொள்ளும், ஈரான் இந்தியாவிடமிருந்து சிறந்த கதை அம்சம் கொண்ட தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், விவரணச்சித்திரங்கள் என்பவற்றைப் பெற்றுக்கொள்ளும்.

இக் கூட்டுக்கமிஷன் பேச்சுக்களின் அடிப்படையில் இந்திய விமானச்சேவை ஈரானிலும் விரிவுபடுத்தப்படவுள்ளது. ஈரானிய யாத்திரீகர்கள் இந்தியாவின் இஸ்லாமிய வணக்கஸ்தலங்களுக்கு யாத்திரை மேற்கொள்ளவும் வசதிகள் செய்துகொடுக்கப்பட்டுள்ளது.

இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு. பி. வி, நரசிம்மராவ், ஈரானிய வெளிவிவகார அமைச்சர் திரு. அலி அக்பர் ஆகியோரின் இறுதிப் பரிசீலனைக்காக இக்கூட்டுக்கமிஷன் முடிவுகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (க)

# ஈராக்கில் இந்திய தொழில்நுட்ப கைவண்ணம்!

பக்தாத், ஜூலை 21

இந்தியாவின் தொழில்நுட்பக் கட்டிட நிர்மாண சேவைகளை பூரணமாகக் கொண்ட நவீன விளையாட்டரங்கொன்று ஈராக்கில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இந்த விளையாட்டரங்கு ஈராக்கின் பதினைந்தாவது ஆண்டு புரட்சிதின நிறைவு விழா வைபவத்தின் போது திறந்து வைக்கப்பட்டது. இவ் விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது,

ஈராக்கின் இப்புதிய விளையாட்டரங்கு நவீன வசதிகளைக் கொண்டதாகும். இதன் நிர்மாணத்துக்கெனபத்தொன்பது கோடியே எண்பது லட்சம் டாலர்கள் செலவிடப்பட்டுள்ளது. இருபத்தையாயிரம் பார்வையாளர்கள் இந்த அரங்கில் அமரக்கூடிய வசதி உண்டு.

இந்தியாவின் தொழில்நுட்ப, கட்டிடக் கலைத்திறன்களை வெளிநாடொன்றில் புலப்படுத்துவதாக இந்த அரங்கம் அமைகின்றது. வேறொரு மத்திய கிழக்கு நாடொன்றில் இந்தியா விமான நிலையமொன்றையும் அமைத்து வருகின்றது.

பல மத்திய கிழக்கு நாடுகள் இந்தியாவின் தொழில்நுட்ப, கட்டிட நிர்மாண சேவைகளைப் பெறுவதற்கான ஒப்பந்தங்களைச் செய்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (கி)

# ஆண்டு தோறும் உலகில் 4 கோடி மக்கள் பட்டினியால் மடிகின்றனர்!

மாஸ்கோ, ஜூலை 21

பலவளர்முக நாடுகளின்மக்கள் பட்டினி, போஷாகின்மை என்பவற்றை அனுபவிக்கும் அதே சமயம் உலக வல்லரசுகள் ஆயுத உற்பத்திக்கு பெருந்தொகையானபணத்தை செலவழிக்கின்றன.

இவ்வாறு சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியும், பிஞ்சுரெக் கம்யூனிஸ்ட் கட்சியும் சேர்ந்து கூட்டாக விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிப்பதாவது:

20-ம் நூற்றுண்டின் 4 கோடி மக்கள், ஆண்டுதோறும் பட்டுனியால் இறக்கின்றனர். இதில் பாதிப்பேர் குழந்தைகளாகும். 50 கோடி மக்கள் போஷாக்குச் சக்தியின்மையினுல் அவதிப்படுகின்றார்கள். வளர்முக நாடுகளுக்கு அரசாங்கங்கள் வழங்கும் உதவியைக் காட்டிலும் 20 மடங்கு அதிகமான தொகையை உலகம் ராணுவத் துறைக்காகச் செலவு செய்யும். இந்த மனித விரோத செயல்களுக்கு உடனடியாக முற்றுப்புள்ளி வைக்கப்படல் வேண்டும் என்று மாஸ்கோவில் நடைபெற்ற சோவியத்-பிரெஞ்சு பேச்சுக்களின் போது சுட்டிக்காட்டப்பட்டது,

இளம் நாடுகளின் துயர நிலைக்கு ஏகாதிபத்திய நாடுகளின் நடவடிக்கையே காரணம் இந்த இளம் நாடுழளிவு கஷ்டங்களை நீக்க வளர்ச்சிபெற்ற நாடுகள் எந்த உதவியையும் அளிக்கமாட்டாது என்பதை வில்லியம்ஸ்பேர்க் உச்சிமகாநாடு காட்டி விட்டது. அத்துடன் வளர்முக நாடுகளின் மீது மேலும் நிரப்பந்ததம் கொண்டுவர அவை முயற்சி செய்கின்றன.

ஆசியாவில் அமெரிக்காவும் அதன் சார்பு நாடுகளும் தமது போருபாய-ராணுவ, அரசின் நோக்கங்களை நிறைவேற்ற முயல்கின்றன. வளர்முகநாடுகளின் பொருளாதார அபிவிருத்திக்கு உதவுவதற்கு பதிலாக் அவற்றின் மீதுஇப்பெரும் நாடுகள் தமது வல்லமையைத் தவிர்க்க முயல்கின்ற. ஆசிய நாடுகளை ஆயுதப் போட்டிக்குள் இழுத்து விடுகின்றன. மலேஷியாவின் ஆயுதச்செலவுகள் 18 சத வீதமாகவும் தாய்லாந்தினது 12 சத வீதமாகவும் இந்தோனேஷியாவினது 14 சத வீதமாகவும் அதிகரித்துள்ளன.

இளம் நாடுகளின் மக்களுக்கு நல்ல வாழ்க்கையை உருவாக்கிக் கொடுக்க வேண்டுமானுல் உலக அமைதியும் ஆயுதப் போட்டியை நிறுத்துவதும் அவசியம் என்றுஅணிசேரா மகாநாட்டில் திருமதி இந்திரா காந்திகூறியகருத்தை இக் கூட்டறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது. (சூ)

விசா இல்லாமல்

சிங்கப்பூர், லண்டன், கனடா, மலேசியா,
கொங்கொங், சம்பியா அல்லது பாகாமா
ஆகிய நாடுகளுக்கு செல்ல

- ✯ விமான டிக்கட்
- ✯ அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் காசோலை

வங்கியின் கட்டணத்தில்

- ✯ விமான ஆசன பதிவுகள்

மற்றும் உங்கள் சகல பிரயாண தேவைக்கும்
இன்றே நாடுங்கள்

**மக்கிரேன் டிரவல்ஸ் லிமிட்டட்**

8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(ZAMBIAN AIRWAYS பிரதான விற்பனைப் பிரதிநிதி)
General Sales Agents

த. பெ. எண்: 92 போன்: 24154

**Radio and Electronics Engineering Course**

THEORY AND PRACTICALS
வார இறுதி வகுப்புகள்
யாழ். நகரில்

சகல தொழில் நுட்ப வசதிகளுடனுன எமது நவீன ஆய்வு கூடத்தில் கொழும்பில் தன்னிகரற்றுத் திகழ்ந்த ஆசிரியரிடமிருந்து கற்று நிறைபலபெற நாம் அளிக்கும்

- RADIO — பழுதறப் பழுதுபார்க்கவும், பிறர் உதவியின்றி உருவாக்கவும்
- TAPE RECORDER
- HI-FI STEREO AMPLIFIER
- RADIO CONTROL
- TRANSFORMER

இவற்றோடு இன்னேரன்ன பல இலத்திரனியற் கருவிகள் யாவற்றின் அடிப்படை அமைப்புப்பற்றிய தெளிவான THEORY AND PRACTICALS-ம் அவற்றைப் பாரிய முறையில் உருவாக்கவும் பழுது பார்க்கவும்

- DIGITAL ELECTRONICS : Theory and Practicals
- TV and VIDEO RECORDERS: பற்றிய அடிப்படை அறிவு புகட்டப்படும்.

சுய தொழில் செய்ய விரும்புவோருக்கும் பிறநாடுகளில் வேலைவாய்ப்புப்பெற விரும்புவோருக்கும் ஓர் அரிய வாய்ப்பு.

வகுப்புகள் ஆரம்பம்: 31-07-1983

**CANTABIA INSTITUTE**

21, பிரதானவிதி, யாழ்ப்பாணம்.
T'Phone : 24201

**சாந்தி** யாழ்.
தினசரி 3 காட்சிகள்
கடைசி வாரம்
**தியாகம்**
(கலர்)

**வெஸ்லி** (மானிப்பாய்)
தினசரி 4-15, 7-00
சனி, ஞாயிறு 1-30
சிவகுமார்-சரிதா
**வண்டிச்சக்கரம்**

**ராஜா** (யாழ்நகர்)
படம் பார்ப்பவர்களின் வசதியை முன்னிட்டு காட்சி நேரங்கள் பின்வருமாறு:-
10-30, 1-30, 6-00
பாக்கியராஜ்- அம்பிகா
கல்லாப்பட்டி சிங்காரம்
நடித்த



**அந்த 7 நாட்கள்**
(கலர்)
கதைவசனம், டைரக்ஷன்
பாக்கியராஜ்

# இன்றைய பலன்

ஆடி 6ம் திகதி
வெள்ளிக்கிழமை
(22—7—83)

மேடம்: பொதுவாக வாழ்க்கையில் அபிவிருத்தி காணப்படுகின்றது. அமைதியான நடவடிக்கைகளின் மூலம்மற்றவர்களுடைய நட்பைப் பெறுவீர்கள் வீட்டிலும் மதிப்பு உயர்வதற்கு இடமுண்டு.

இடபம்: ஆயுத பீடைக்கு இடமுண்டு எனவே எதிலும் அவதானம் விரும்பத்தக்கது அவசரப் போக்கு அனர்த்தங்களுக்கு இடமளிக்கலாம் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை வெற்றிக்கு வழி அமைக்கும்.

மிதுனம்: கனிவான சம்பவங்கள் நடைபெறும் காதலர்களுக்கு கனகுஷியான தினம் தாம்பத்திய வாழ்க்கையில் பிணைப்புக்கள் மேலும் பலப்படுத்தப்படும் சிலருக்குத் திடீர்த் திருமணமும் நடைபெறும்.

கடகம்: நண்பர்களேஉங்கள் முன்னேற்றத்திற்கு தடைக்கல்லாக அமைவார்கள் மொட்டைக் கடிதம் ஒன்று சிறிது பரபரப்பை ஏற்படுத்தும் தொழில் துறையில் நஷ்டம் ஏற்படலாம்.

சிங்கம்: உயர்ந்த எண்ணங்கள் உங்களைப் புகழின் உச்சத்திற்கு அழைத்துச் செல்லும் கவர்ச்சிகரமான தினம் தந்தையின் ஆதரவும் தப்பாமல் கிடைக்கும் பொதுத் துறையில் புகழ்பரவும்.

கன்னி; புதியகண்டுபிடிப்புக்களில் ஆர்வம் காட்டுவீர்கள் விஞ்ஞானத்துறையில் ஈடுபாடுடையவர்கள் பாராட்டப்படுவார்கள் தொழில் புரியும் இடத்தில் உயர்ந்த அந்தஸ்தும் கிடைக்கும்.

துலாம்: கொள்கையில்அதிக பற்றுதல் ஏற்படும் இலட்சிய நோக்குடன் காரியமாற்றுவீர்கள் இனசனக் கொண்டாட்டம் நடைபெறும் உணவு விடுதி நடத்துபவர்களுக்கு உற்சாகம் பிறக்கும்.

விருச்சிகம்: என்னதான் திறமைசாலியாக இருந்தாலும் இன்று கோட்டைவிட்டு நழுவக்கூடும் முகமன் பேசுவோர் விடயத்தில் மிகவும் எச்சரிக்கையாக குடும்பம் நடத்தவும்.

தனு: ஒன்றை நினைத்தால் அது நடைமுறையில் வேறு ஒன்றாக அமையும் வந்துசேர வேண்டிய பணத்தில் மீண்டும் தடை ஏற்படலாம் சிந்தையில் குழப்பநிலை தோன்றும்.

மகரம்: போதும் என்ற மனதுடன் வாழ்வீர்கள் எதிலும் நிறைவு தென்படும் முதியவர் ஒருவரின் அறிவுரை உங்களுக்கு புதிய பாதையைக் காட்டும் தாம்பத்திய வாழ்வில் அன்பு தவழும்.

கும்பம்: இன்னலின்பின்னல் உங்கள் முன்னேற்றத்தைத் தடுக்கும் இதயபாரம் வேதனைப்படுத்தும் திடசித்தம் இருப்பின் எதையும் சமாளிக்கலாம் உமது சொந்த வாழ்வில் மற்றவர் தலையிடுவார்.

மீனம்: தடைப்பட்ட காரியங்கள் நல்ல முடிவுக்குவரும் தாய் வழிப்பெருமை உண்டு வாகன சுகத்துடன் வாழ்வில் நலமுண்டு.

சோதிடக் கலாநிதி
திருமலை
**க. வேலுப்பிள்ளை**

**ஹரன்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 1-30, 6-15
சிவாஜி-சரிதா
ராதா-
ராஜீவ் **துணை**
(கலர்)

23-7-83 வரை மட்டும்
**மனோகரா** (யாழ். நகர்.)
தினசரி 3 காட்சிகள்
கமலஹாசன்-ஸ்ரீதேவி
**வாழ்வே மாயம்**
(ஈஸ்மன்கலர்)

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
பிரதாப்— சோபா
**மூடுபனி**

**லிடோ** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ரஜனிகாந்த்
**முரட்டுக் காளை**

**ஸ்ரீதர்** தினசரி 10-30, 2-30, 6-00
(யாழ்ப்பாணம்)
25-7-83வரை
ரவிச்சந்திரன்—காஞ்சனா
**காதலிக்க நேரமில்லை**

**ராணி** தினசரி 10-30, 2-30, 6-15 மட்டும்
(யாழ். நகர்)
9-வது வாரம்
கமலஹாசன் - அம்பிகா
**சகல கலா வல்லவன்**

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-முத்துராமன்-விஜயா
**நெஞ்சிருக்கும்வரை**
விரைவில் வருகிறது
ஆனந்தராகம்

**றீகல்-Regal** தினசரி 10-30, 2-00, 4-30
7-15 P. M.
இன்னும் 3 தினங்கள் மட்டும்
கபீர்பேடி....சனம் சூரி... நடிக்கும்
**"கேர்ல் (f)ப்ரம் இந்தியா"**
**GIRL FROM INDIA**
TECHNICOLOR
வயது வந்தவர்கள் மட்டும்

## வெளிநாட்டு
# வேலை வாய்ப்பு மோசடி: இருவர் றிமாண்டில்!

(மன்னார்)
சவூதி அரேபியாவில் வேலை பெற்றுத் தருவதாகக்கூறி இளைஞர்களிடம் பண மோசடி செய்த இருவரை மன்னார் பொலிசார் கைது செய்தனர்.

இப்பண மோசடி தொடர்பாக மேலும் ஒரு சந்தேக நபரை பொலிசார் தேடி வருகின்றனர்.

பொலிசாரினுல் கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் முருங்கனையும், மற்றவர் உப்புக்குளம் பகுதியையும் சேர்ந்தவர்களாகும்.

இவ்விரு சந்தேக நபர்களையும் பொலிசார் கடந்த வியாழக்கிழமை மன்னார் நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்தனர்,

சந்தேக நபர்களை மறு விசாரணை வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் திரு உடலகமஉத்தரவிட்டார்.

# நல்லூர் கந்தசுவாமிகோவில் வருடாந்த உற்சவ ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)
பிரசித்திபெற்ற நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவம் அடுத்தமாதம் 13ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாவதை முன்னிட்டு யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. கே. சிவஞானம் தலைமையில் உற்சவ காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆலோசிப்பதற்கான கூட்டம் ஒன்று யாழ். மாநகர சபையில் நடைபெற்றது.

சுகாதாரம், போக்குவரத்து, பாதுகாப்பு ஆகியதுறைகளைச் சேர்ந்த அதிகாரிகள் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

சென் ஜோன் அம்புலன்ஸ் படையின் வடபிராந்திய ஆணையாளர் முகாந்திரம் ஈ. பி. இராசையா, யாழ். மாவட்ட ஆணையாளர் டாக்டர் சுகந்தன் இன்ஞசித்தம்பி ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு கடந்த ஆண்டுகளைப் போல இவ்வாண்டு உற்சவத்திலும் முதலுதவிச் சிகிச்சை முகாமை உற்சவகாலம் முடிவடையும்வரை ஆலய வீதியில் நிறுவி சேவையாற்றுவதென்றும், வீதிஒழுங்கு, பாதுகாப்பு ஆகிய பணிகளிலும் ஈடுபடுவது என்றும் உறுதியளித்தனர்.

(பண்டத்தரிப்பு நிரு.)

## மென்பந்து கிரிக்கட்

(கிளிநொச்சி)
கிளிநொச்சி அருணோதயா விளையாட்டு கழகம் நடாத்திய 20 ஓவர் மென்பந்து கிரிக்கட் போட்டியில் அருணோதயா விளையாட்டுக்கழக 'அ' பிரிவினர்க் கேடயத்தைப் பெற்றுக் கொண்டனர். இரண்டாவது இடத்தைக் கிளிநொச்சிசிறைச் சாலைவிளையாட்டுக்கழகத்தினர் பெற்று இதற்கான வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டனர். றெட்றிக்கோ அரங்கில் இப்போட்டி நடைபெற்றது. (அ)

## சரவணை செல்வக்கதிர்காம உற்சவம்

(யாழ்ப்பாணம்)
சரவணை மேற்கு இரண்டாம் வட்டாரத்தில், குடிசைக்குமாரனுகக் கொண்டெழுந்தருளி வீற்றிருக்கும் செல்லக்கதிர்காம முருகன் ஆலயத் திருவிழா கடந்த 10-ம் திகதி ஆரம்பமாகியுள்ளது. 26-ம் திகதியன்று தீர்த்தோற்சவத்துடன் முடிவடையும்.

# "புத்தகக் கல்வியினுல் பூரணத்துவம்பெறமுடியாது!'
## விளையாட்டு விழாவில் பேச்சு

(வண்ணார்பண்ணை)
''புத்தகக் கல்வியுடன் மட்டும் மாணவர்கள் பூரணத்துவம் அடையமுடியாது. அறிவிலும், ஆற்றலிலும் பூரணத்துவமடைய மாணவர்களுக்கு விளையாட்டுக் கல்வியும் முக்கியமானதாகும்.''

இவ்வாறு நல்லூர் வட்டாரக் கல்வியதிகாரி திரு. எஸ், சிவவிநாயகமூர்த்திநல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாசாலை வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியிலும், பரிசளிப்பு விழாவிலும் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

கல்லூரி அதிபர் திருமதி இ. ஜெகானந்தகுரு தலைமையில் மேற்படி வித்தியாலய முன்றலில் நடைபெற்ற இவ்வைபவத்தில் திரு. சிவவிநாயகமூர்த்தி தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

மனித சுதந்திரமும், மனித ஆற்றலும் பெறுவதற்கு மாணவர்களுக்கு விளையாட்டும் ஒரு முக்கிய கருவியாகின்றது,

நற்பண்புகளையும், மன உறுதியையும், சகிப்புத்தன்மைகளையும் விளையாட்டுக்களின் மூலமே பெறமுடியும். இதனுலேயே கல்வியில் விளையாட்டுக் கல்வியும் முக்கியத்துவம் பெறுகிறது.

வித்தியாலய அதிபர் திருமதி இ. ஜெகானந்தகுரு பேசுகையில் கூறியதாவது:- பண்டைக் காலங்களிலும் கல்வியுடன் விளையாட்டும் கலந்து உறுதியான தெளிவான அறிவுள்ள சமுதாயத்தை உருவாக்கியதை எமது அறிவுச் சான்றுகள் தெளிபடுத்துகின்றன என்றார்.

இப்போட்டிகளில் பச்சை இல்லம் 1-ம் இடத்தையும், சிவப்பு இல்லம் 2-ம் இடத்தையும், நீல இல்லம் 3-ம் இடத்தையும் பெற்றன.

## யாழ். ஆஸ்பத்திரி ஊழியர்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)
யாழ். ஆஸ்பத்திரி ஊழியர்கள் தமது பாதுகாப்பு நலன் கருதி தனியான அடையாள அட்டைகள் வழங்குமாறு யாழ்ப்பண ஆஸ்பத்திரி வைத்திய அதிகாரியை கோரியுள்ளனர். (மா)

## வட்டுக்கோட்டைத் தொகுதி
# கல்வி அபிவிருத்திக்கான நிதி ஒதுக்கீடு விபரம்

(பண்டத்தரிப்பு)
வட்டுக்கோட்டைத் தொகுதியிலுள்ள பாடசாலைகளுக்கு இவ்வருட பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத்திட்டத்தின்கீழ் வட்டுக்கோட்டை எம். பி. கலாநிதி நீலன் திருச்செல்வத்தினுல் கல்வி அபிவிருத்தியின்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி விபரம் பின்வருமாறு:-

சுழிபுரம் ஆறுமுகவித்தியாலய மணையியல்கூடத் திருத்த வேலைக்கும், மலசலகூடம் அமைப்பதற்கும் 20 ஆயிரம் ரூபா.

பண்ணுகம் மெய்கண்டான் வித்தியாலயத்திற்கு மின்சாரம் வழங்குவதற்கும், மணையியல் திருத்த வேலைக்கும் 20 ஆயிரம் ரூபா. அராலி இந்துக் கல்லூரிக்கு மின்சார விநியோகம் செய்வதற்கு 20 ஆயிரம் ரூபா.

காரைநகர் யாழ்ரன் கல்லூரி விளையாட்டு மைதானம் புனரமைப்புச் செய்வதற்கு 20 ஆயிரம் ரூபா.

அராலி சரஸ்வதி மகாவித்தியாலய மணையியல்கூடம் திருத்தம் செய்வதற்கு 15 ஆயிரம் ரூபா. வட்டுக்கோட்டை சுப்பிரமணிய வித்தியாலய விஸ்தரிப்புக்கு 22 ஆயிரம் ரூபா.

வட்டுக்கோட்டை திருஞானசம்பந்தர் வித்தியாலய புதிய கட்டிடத்திற்கு ஒரு லட்சம் ரூபா.

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி புதிய கட்டிடம் நிறுவுவதற்கு ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபா.

பண்டத்தரிப்பு ஜசிந்தா வித்தியாலயத்திற்குப் புதிய கிணறு அமைப்பதற்கு 25 ஆயிரம் ரூபா.

சித்தங்கேணி கணேச வித்தியாலயத்திற்குக் காணி சுவீகரிப்பை மேற்கொள்வதற்கு 15 ஆயிரம் ரூபா.

## ஜனாதிபதியின் மீள் அழைப்புக்கு

# மாநில மகாநாட்டில் கூட்டணி முடிவு செய்யும்!

(கொழும்பு)

''ஜனாதிபதி கூட்டியுள்ள வட்டமேசை மகாநாட்டின் நோக்கம்பற்றி பலவித கருத்துக்கள் நிலவுவதால், உடனடியாக எமது முடிவை அறிவிக்கமுடியவில்லை. எதிர்வரும் 23-ம், 24-ம் திகதிகளில் நடைபெறவிருக்கும் மன்னார் மாநில மகாநாட்டிலேயே தமிழர் விடுதலைக்கூட்டணி வட்டமேசை மகாநாடு பற்றி ஆராய்ந்து பூரண முடிவு எடுக்கும்.''

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் கடிதமொன்றை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு அனுப்பிவைத்துள்ளார்.

அக்கடிதம் வருமாறு:-

''ஜூலை 16-ம் திகதிய எனது கடிதத்தில் கூறிய தமிழ் மக்களின் பிரச்சனை பற்றிய சகல அம்சங்களையும் உள்ளடக்கியே ஜூலை 20-ம் திகதி வட்டமேசை மகாநாடு நடைபெறுமென்று எனக்கு உங்கள் கடிதத்தில் தெரிவித்திருந்தீர்கள். அதுசம்பந்தமாக இக்கடிதத்தை எழுதுகின்றேன்.

''இத்தகவல்களை நீங்கள் அனுப்பியதற்காக நன்றி தெரிவிக்கிறேம்.

'அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட பல்வேறு அடக்குமுறை நடவடிக்கைகள் பற்றி நாம் பாரதூரமாக நோக்குகிறேம். உத்தேச ஆருவது சட்டத்திருத்தம், வடக்கில் இராணுவச்சட்டத்தை அமுல்படுத்த உத்தேசித்துள்ளமை, வவனியா, திருமலை ஆகிய இடங்களிலிருந்து மலையகத் தமிழ் மக்களை வெளியேற்றுவதற்காக மேற்கொள்ளப்படவிருக்கும் சட்ட வாக்கம், யாழ். மாவட்டத்தில் சைக்கிள்களைப் பாவிக்க இராணுவத்திடமிருந்து அனுமதி பேறவேண்டுமென்ற சிபார்சு உட்படப் பல அடக்கு முறைநடவடிக்கைகள் பற்றி எமது ஆழ்ந்த கவலையைத் தெரிவிக்கிறேம். தமிழ் பேசும் மக்களின் உயிர் உடமைகளைப் பொறுத்தவரை இத்தகைய நடவடிக்கைகள் அவர்களின் பாதுகாப்பின்மையை மேலும் அதிகரிக்கிறது. அத்துடன் தமிழ் பேசும் மக்களின் கருத்துச் சுதந்திரம், நடமாடும் சுதந்திரம் ஆகியவற்றையும் இந்த நடவடிக்கைகள் மறுகின்றன.

''தமிழ் பேசும் மக்களின் பிரச்னைகள் தொடர்பாக அரசாங்கம் அக்கறையுடன் பேச்சு வார்த்தை நடாத்த விரும்புகிறது என்பது பற்றிய நம்பிக்கையை எமக்கு ஏற்படுத்துவதற்கு இந்த நடவடிக்கைகள் உந்துதலாக இல்லை. இன்று நடைபெறவிருக்கும் மகாநாட்டின் நோக்கம்பற்றித் தொடர்ந்தும் குழப்பமான தன்மையே இருப்பதால், உங்கள் ஜூலை 18-ம் திகதியிடப்பட்ட கடிதத்துக்கு பூரணமாக எமது ஆதரவைத் தெரிக்கமுடியாதிருக்கிறேம். எதிர்வரும் 23ம், 26ம் திகதிகளில் நடைபெறவுள்ள எமது கட்சி மகாநாட்டில் இந்த விவகாரம்பற்றிப் பூரணமாக ஆராயும்வரை எங்கள் ஆதரவைத் தெரிவிக்க முடியாதிருக்கிறேன்''

## இந்தியா மறுப்பு

(கொழும்பு)

இலங்கையின் உள்விவகாரங்களில் இந்தியா தலையிடுவதாகத் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுகளை இந்தியா மறுத்துள்ளதாக பி. ரி. ஐ. செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

## காங்கேசன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரதிநிதி திரு. க. ஜெயபாலசிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## இலங்கை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கேட்டபோது, உயர்மட்டக் கருத்தையே தாம் கூறியதாக அவர் சொன்னர்.

அத்தோடு இலங்கையில் உருவாகும் நிலைமை எதிர் விளைவுகளை ஏற்படுத்துமென்றும் வாஜ்பாய் மேலும் சொன்னர்.

இவற்றை அறிந்த இலங்கை வெளிவிவகார அமைச்சு பதற்றமடைந்து, இலங்கையிலுள்ள இந்தியப்பதில் தூதுவரை வரவழைத்து நிலைமையை விளக்கியுள்ளது.

இலங்கையில் இப்போது அமுலிலிருக்கும் அவசரகாலச் சட்டத்தின்கீழ் இந்திய வம்சாவளியினருக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது என்றும் அமைச்சர் ஜனுப் ஹமீட் தெரிவித்துள்ளார்.

# "த.வி. கூட்டணி எம்.பி.க்கள் ராஜினமாச் செய்யவேண்டும்"

## மன்னர் கிளை தீர்மானம்

(மன்னர்)

தமிழர் விடுதலைக்கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்கள் 1977-ம் ஆண்டு முதல் 6 வருடத்திற்கான தமது பதவிக் காலம் முடிந்தவுடன் தமது பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலக வேண்டும்.

இவ்வாறு கூறும் தீர்மானம் ஒன்றை தமிழர் விடுதலைக் கூட்டணியின் மன்னர் மாநில மகாநாட்டில் சமர்ப்பிப்பதென தமிழர் விடுதலைக் கூட்டணியின் மன்னர்க் கிளை கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இக்கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை செல்வி அருள் சீலி டயஸ் தலைமையில் மன்னர் பட்டின சபை மண்டப மேல்மாடியில் நடைபெற்றது.

மன்னர் மாநிலமகாநாட்டில் சமர்ப்பிக்கப்படவுள்ள தீர்மானத்தில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்கள் உருப்படியாக எதையும் செய்யவில்லை. 1982-ம் ஆண்டு தேர்தல்வேண்டுமா? தேர்தல் வேண்டாமா? என நடைபெற்ற சர்வசன வாக்கெடுப்பின்போது தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்கள் தேர்தல் நடத்தப்படவேண்டுமென பிரசாரம் செய்தனர்.

இதற்கிணங்க தமிழர் விடுதலைக்கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகவேண்டும்,

ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன ஜனதிபதி தேர்தலின்போதும், சர்வசன வாக்கெடுப்பின்போதும் தமது கட்சிக்கு குறைந்த வாக்குகள் கிடைத்த தொகுதிகளில் மீண்டும் தேர்தல்களை நடத்தினர்.

இதேபோல் சர்வஜன வாக்கெடுப்பின்போது தேர்தல் நடத்தப்பட வேண்டுமெனப் பெரும்பான்மையான வாக்களித்த தமிழ் பகுதிகளிலும் மீண்டும் தேர்தல் நடத்துவதற்கு வசதியாகத் தமிழர் விடுதலைக் கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது பதவியிலிருந்து விலகவேண்டும். (சூ)

## 'எக்ஸோஸெட்'டைவிட மேலான

# பிரிட்டிஷ் ஏவுகணை இந்தியாவுக்கு விற்பனை!

லண்டன், ஜூலை. 21

போர்க்கப்பலிலிருந்து பிரயோகிக்கும் அதிசக்தி வாய்ந்த ஏவுகணைகளை இந்தியாவுக்கு பிரிட்டன்வழங்கவுள்ளது.

இந்த ஏவுகணைகளை பிரிட்டனிடமிருந்து பெறும் முதலாவது வெளிநாடு இந்தியாவாகும். இத்தகவல்களை பிரிட்டனின் பிரதி பாதுகாப்பமைச்சர் தெரிவித்தார்.

பிரிட்டனின் இப்புதிய ஏவுகணை மிகவும் சக்திவாய்ந்ததாகும். இதனைக்கொண்டு எதிரிகளின் கப்பல்களை பெருமளவு நாசஞ் செய்யமுடியும்.

பிரான்ஸின் 'எக்ஸோஸெட்' ஏவுகணையே கப்பல்களை நாசஞ் செய்வதில் பிரபல்யம் பெற்றிருக்கின்றது. இதன் வல்லமை போக்லண்ட் யுத்தத்தில் நிரூபிக்கப்பட்டது.

எனவே இப்பிரெஞ்சுத்தயாரிப்புக்குப் போட்டியாகவே பிரிட்டன் தனதுஇப்புதிய ஏவுகணையை தயாரித்துள்ளது. 'எக்ஸோஸெட்'டைவிட பல மடங்கு பாதிப்புக்களை இது ஏற்படுத்தும் என்றும் விபரிக்கப்பட்டது. (கி)

## யாழ்ப்பாணத்தில் சிவில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொலைகள், 62 வன்செயல்கள், 228 தீவைப்புச் சம்பவங்கன், 6 கொள்ளைகள், 53 குற்றச் செயல்கள் இடம்பெற்றுள்ளன இதனைத் தொடர்ந்து மாணவர்களின் பகிஷ்கரிப்பு நடைபெற்றது. சென் மேரிஸ் கல்லூரிக்குக் குண்டுவீசப்பட்டது. அங்கு ஒரு சில குழுக்கள் இனக் கலவரம் நடைபெறுவதனை விரும்புகின்றனர்.

மட்டக்களப்பில் அரசாங்க சொத்துக்கள் பலஅழிக்கப்பட்டன. 4 பஸ்கள், 7 அரசாங்க வாகனங்கள் தீவைக்கப்பட்டுள்ளன.

வவனியாவில் 3 பஸ்கள் எரிக்கப்பட்டன. ஒருஅரசாங்க வாகனம் தீவைக்கப்பட்டது, முருங்கன் தபால் நிலையம் கல் வீசித் தாக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் தமிழீழத் தீவிரவாதிகள் அரசாங்க சொத்துக்களை அழிக்கின்றனர். அங்கு இத்தகைய சம்பவங்கள் தொடர்ந்து இடம் பெறுகின்றன. 4 பஸ்கள், 3 ஜீப்கள் தீவைக்கப்பட்டன. பல லட்சம் பெறுமதியான யாழ் தேவிப் பெட்டிகள் தீயிடப்பட்டன. ஆனல் உயிர்ச்சேதம் ஏதும் ஏற்படவில்லை. பாடசாலைகளில் இரசாயனப்பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுவருகின்றன, காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலையில் வெடிகுண்டு வைத்துத் தகர்க்கும் கருவி, இரசாயனப் பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டன. கொழும்பு — யாழ்ப்பாணம் சேவையில் ஈடுபடும் தனியார் போக்குவரத்து பஸ்கள் கல்வீச்சுக்கு இலக்காகி வருகின்றன,

யாழ்ப்பாணத்தில் இத்தகைய சம்பவங்கள் இடம்பெறுவதும், தொடர்ந்து அரச அலுவலகங்கள் சேதப்படுத்தப்படுவதும், அங்கு அரசாங்க ஊழியர்கள் வேலையில் இருந்துவெளியேற்றப்படுவதும் நடைபெறுகின்றன. குறிப்பாக யாழ்ப்பாணத்தில் சிவில் நிர்வாகம் சீர்குலைந்து காணப்படுகின்றது. அண்மையில் மீசாலையில் இரண்டு பயங்கரவாதிகள் சுட்டுக்கொலை செய்யப்பட்டனர். அவசரகாலச் சட்டம் சில அதிகாரங்களைப் படையினருக்கு வழங்காவிட்டால் இது போன்ற வன்முறைச் சம்பவங்களை முறியடிக்க முடியாது. எனவேதான் தொடர்ந்து மீண்டும் ஒரு மாத காலத்துக்கு அவசரகாலச் சட்டத்தை நீடிக்கும் பிரேரணையை தாக்கல் செய்கின்றேன்'' என்று குறிப்பிட்டார்,

### சிவா பேச்சு

இப்பிரேரணை மீது தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் எம். சிவசிதம்பரம்பேசுகையில்

''ஒரு வாரத்திற்கு முன் மலேசியப் பேராசிரியர் ஒருவரின் மருமகனை சோமசுந்தரம் என்பவர் வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையற்திற்கு விசாரணைக்கு அழைக்கப்பட்டார். விசாரணையின் பின் அவர் விடுதலை செய்யப்பட்டார். அவரை ஒரு ஒழுங்கையால் செல்லும்படி பொலிசார் பணித்தனர். அவர் அவ்வொழுங்கையால் செல்லும்போது அவருக்குப் பின்னல் ஒரு ஜீப் சென்றதாம். அதன்பின்னர் சோமசுந்தரத்தைக் காணவில்லை. எம். பிக்களாகிய நாங்கள்கூட அவரைத் தேடியும் கண்டுபிடிக்கமுடியவிவ்லை. 3 நாட்கள் கழித்து அவரது சடலம் அவரது வீட்டிலிருந்து 16 மைல் தூரத்திலுள்ள கிணற்றில் அழுகியநிலையில் காணப்பட்டது. அவருடைய தலையிலிருந்து படையினர் பாவிக்கும் துப்பாக்கிக் குண்டுகள் எடுக்கப்பட்டன''- (இ-சூ)

# "எமது பாடசாலைகளின் குறைகளை நாமே தீர்க்கவேண்டும்!" மானிப்பாய் எம். பி. கூறுகிறர்

(மாவிட்டபுரம்)

''எம் பாடசாலைகளின் குறைபாடுகளை நீக்க எந்த அரசாங்கத்தாலும் முடியாது. அரசாங்கத்திடம் பணம் இல்லை. ஆகவே நாமே எம் பாடசாலைகளின் குறைபாடுகளை தீர்க்க வேண்டும்.''

இவ்வாறு மானிப்பாய் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் இணுவில் சைவப்பிரகாச மகா வித்தியாலய பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் கூறினர்.

வித்தியாலய அரங்கில் அதிபர் திருமதி ச. ஆறுமுகராஜா தலைமையில் நடந்த இவ்விழாவில் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

''சென்ற நூற்ருண்டின் நடுப்பகுதியில் சைவப்பெரியார் அம்பிகைபாகனுல் இவ்வித்தியாலயம் ஆரம்பிக்கப்பட்டது. ஆங்கில ஏகாதிபத்தியத்தின் உச்சிக்கால கட்டத்தில் தமிழ், சைவம், பழைய பண்புகள், பாரம்பரியங்கள் ஆகியன அருகி வேறு சமயத்தை தழுவும்நிலை உருவானது. அந்நிலையில் சைவம் தமிழ் வளர இப்பாடசாலையை அவர் அமைத்தார். அவர் எந்நோக்கத்துக்காக இப்பாடசாலையை ஆரம்பித்தாரோ அந்நோக்கம் நிறைவேற நாம் செயல்படவேண்டும்.

''நாட்டின் சரித்திரத்தில் முக்கிய இடத்தை இப்பாடசாலை பெறுகிறது. பாடசாலை உருவான நோக்கத்தை குறிக்கோளை நிறைவேற்றவேண்டிய பாரிய பொறுப்பு எம்கையில் உள்ளது.

''யாழ். மாவட்டத்தில் எந்தப் பாடசாலையை எடுத்தாலும் அங்கு ஆசிரியர் பற்ருக்குறை, கட்டிடம் போதாமை, தளபாட வசதியின்மை நிலவுகிறது. இந்தக் குறைபாடுகளை நாம் ஆதரிக்கும் அரசாங்கமாக இருந்தாலும் சரி, எதிர்க்கும் அரசாங்கமாக இருந்தாலும் சரி தீர்க்க முடியாது. அதற்கு அரசாங்கங்களிடம் பணம் இல்லை. ஆகவே பாடசாலை ஆசிரியர்கள், நலன் விரும்பிகள் மற்றும் கிராமத்தவர்கள் குடும்பம்போல் இயங்கி தேவைகளைப் பூர்த்தி செய்யவேண்டும்'' என்ருர்.

கல்வி அதிகாரி திருமதி தியாகராசா பேசுகையில்: 'மாணவர்களைசமயக் கல்வியில் பயிற்றுவிக்கவேண்டியது ஆசிரியர்களின் கடமையாகும். நற்பண்புள்ள மாணவர்களை உருவாக்க அத்திவாரமாக அமைவது சமயக்கல்விதான், சமயக் கல்வி ஒழுங்கான முறையில் போதிக்கப்பட்டால் தான் சிறந்த மாணவர்களை சமுதாயம் பெறமுடியும்'' என்று கூறினர்.

மாணவ, மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (வெ)

## யாழ். மாவட்டத்தில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

காரியிடம் பெறவேண்டும் என்றசெய்தி கொழும்பில் வெளியாகும் முக்கிய பத்திரிகைகள் பலவும் பிரசுரித்திருந்தன என்பதும், பின்னர் அச்செய்திகள் திருத்திப் பிரசுரிக்கப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது.

## மண்ணெண்ணை பெற்றேல் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

மண்ணெண்ணை, பெற்றேல், டீசல் எண்ணெய் வகைகள் நேற்றுப் புதன்கிழமை நள்ளிரவிலிருந்து அதிகரிக்கப்பட்டுள்ளது.

மண்ணெண்ணை லீட்டர் 6 ரூபா 58 சதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. பெற்றேல் ஒரு கலன் 6 ரூபா 82 சதத்தாலும், டீசல் ஒரு கலன் 6 ரூபா 29 சதத்தாலும் அதிகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-மா)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1983—ம் ஆண்டு ஜூலை மாதம் 22-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka. under number B 100236/81. Eelanadu-P. O. Box: 49, Telegram: Eelanadu, Telephone: 22389—24126.